**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SC.No.67/2024 - PW-1**

| | |
|---|---|
| Name | திரு. முரளி |
| Husband/Father Name | அண்ணாமலை |
| Village /Area | புதுப்பட்டு |
| Taluk | நெமிலி |
| Occupation | கூலி |
| Age | 42 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 26.11.2025.

**(1–ம் எதிரி ஆஜர். எதிரிகள் 2 மற்றும் 3 கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்த பாஸ்கர் என்னுடைய தம்பி ஆவார். ஆஜர் எதிரிகளில் ராமு என்னுடைய சித்தப்பா மகன். கடந்த 08.11.2016 அன்று மாலை 03.00 மணிக்கு என் அம்மாவும் தம்பி பாஸ்கரனும் வீட்டில் இருந்த போது இராமு மற்றும் மணி (எ) மணிகண்டனும் என் தம்பி பாஸ்கரனை இரு சக்கர வாகனத்தில் ஏற்றி அழைத்து சென்றார்கள். அன்று இரவு என் தம்பி பாஸ்கரன் வீட்டிற்கு வரவில்லை இது குறித்து மறுநாள் 09.11.2016 அன்று காலை ராமு (எ) ஐயர் மற்றும் மணிகண்டனிடமும் என் தம்பி எங்கே என்று கேட்டேன் அதற்கு அவர்கள் சரியான பதில் கூறாமல் தெரியாது என்று பதில் கூறினார்கள்.

பிறகு என் உறவினர்களின் வீட்டிற்கு சென்று என் தம்பியை தேடிப் பார்த்தேன். பிறகு அவர் எங்கும் கிடைக்கவில்லை அதனால் 11.11.2016 அன்று மாலை 07.30 மணிக்கு காவேரிப்பாக்கம் காவல் நிலையத்தில் எனது தம்பியை காணவில்லை என்று புகார் கொடுத்தேன். பிறகு 12.11.2016 அன்று காலை 06.00 மணிக்கு ராமுவும், மணிகண்டனும் அவர்களது வீட்டின் பின்னால் நின்றுக்கொண்டு "நாம் இருவரும் பாஸ்கரனை அடித்துப்போட்ட இடம் புதூர் பெருமாள் ஏரிப்பக்கம் நாம அடிச்சி போட்டது தெரியாமல் இவங்க எங்கோங்கோ தேடுறாங்க" என்று

பேசிக்கொண்டிருந்நததை என் உடன் பிறந்த அக்கா சுமதி என்பவர் காதில் கேட்டு விட்டு என்னிடம் தகவல் சொன்னார்.

அதன் பிறகு எனது அக்கா மகன் அரிதாஸ்ம் எதிரிகள் சொன்ன இடத்திற்கு காலை 07.30 மணிக்கு சென்று தேடிப் பார்த்தோம். புதூர் பெருமாள் ஏரியின் கரம்பு நிலத்தில் எனது தம்பி பாஸ்கரனை அடித்து கொலை செய்து போட்டிருந்தார்கள். என் தம்பி நாங்கள் பார்த்த போது அன்றைய தினத்தில் பச்சை கலர் கோடு போட்ட சர்ட் மற்றும் கருப்பு கலர் பேண்ட்டையும் அணிந்திருந்ததை வைத்து அவர் என்னுடைய தம்பி தான் என்று முடிவு செய்து அவர் தான் அந்த இடத்தில் கொலையுண்டு கிடந்தார். என்பதை உறுதி செய்து பிறகு உறவினர்களுக்கு தகவல் கூறினோம்.

பிறகு காவல் நிலையத்திற்கும் தகவல் கொடுத்தோம். பிறகு போலீசார் முற்பகல் 11.00 மணிக்கு சம்பவ இடத்திலே வந்து எங்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தனர். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அந்த புகார் **அதசாஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

சாட்சி இறந்த பாஸ்கரனின் உடைகளை அடையாளம் காண்பிக்க வேண்டி வழக்கு சொத்துகள் நீதித்துறை நடுவர் வாலாஜா நீதிமன்றத்தில் இருந்து வரப்பெறாததால் முதல் விசாரணை நிறுத்திவைக்கப்படுகிறது.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.11.26 16:20:13 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.